செ.வெ.எண்:19 நாள்: 10.01.2019

## கரூர் மாவட்டம்

## கஜா புயலால் பாதிக்கப்ப்பட்ட மக்களுக்கு இதுவரை சுமார்.ரூ.1கோடி மதிப்பிலான நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளது - 27 வகையான நிவாரணப்பொருட்களை பயனாளிகளுக்க்கு வழங்கி மாண்புமிகு மக்களவை துணை சபாநாயகர் டாக்டர்.மு.தம்பிதுரை அவர்கள் பேச்சு

அதன் விபரம் வருமாறு:

கரூர் மாவட்டம் கடவூர் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் கஜா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ந்து தமிழக அரசின் நிவரணம் வழங்கப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில் கடவூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் இன்று(10.01.2019) 673 பயனாளிகளுக்கு ரூ.25,57,400 மதிப்பிலான 27 வகையான நிவாரணப்பொருட்களை மாண்புமிகு மக்களவை துணை சபாநாயகர் டாக்டர்.மு.தம்பிதுரை அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப.,அவர்கள் தலைமையில் வழங்கினார்.

பின்னர் மாண்புமிகு மக்களவை துணை சபாநாயகர் அவர்கள் பேசிதாவது:

மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களின் வழயில் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி திரு.கே.பழனிசாமி அவர்களின் தலைமையிலான அரசு அடித்தட்டு மக்களுக்கான திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகின்றது. தமிழகத்தின் கடலோர மாவட்டங்களை பெருமளவில் பாதித்த கஜா புயலின் தாக்கத்தை தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாலும், புணரமைப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகளாலும் எதிர்கொண்டு குறுகிய காலத்திலேயே மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு மீண்டுவரும் வகையில் சிறப்பாக தமிழக அரசு செயல்பட்டது என்பது அனைவரும் அறிந்ததே.

கஜா புயலால் கரூர் மாவட்டத்தில் கடவூர் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் வீடுகள் மற்றும் பயிர்கள சேதமடைந்திருந்ததை வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் வளர்ச்சித்துறை அலுவலர்கள் தொடர்ந்து கணக்கெடுத்து அரசுக்கு அறிக்கையாக சமர்ப்பித்ததன் அடிப்படையில் மக்களுக்கான நிவாரணம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றது.

வீடு இழந்தவர்களுக்கும், பயிர்கள் பாதிப்படைந்தவர்களுக்கும் இழப்பீட்டிற்கான நிவாரணத்தொகை வழங்குவதற்கான ஆணை வழங்கப்பட்டு, அவரவர் வங்கிக்கணக்குகளில் இழப்பீட்டுத்தொகை வரவுவைக்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து தமிழக அரசின் மூலம் வழங்கப்படும் 27 வகையான நிவாரணப்பொருட்கள் வழங்கப்படுகின்றது.

அரிசி, பாய், போர்வை, வாளி, குவளை, குடை, டீத்துாள், அம்மா உப்பு, சாம்பார் துாள், ரவை, கொசுவர்த்தி, துவரம்பருப்பு, பிஸ்கட் பாக்கெட்டுகள், தீப்பெட்டிகள், குளியல் சோப்பு, சலவை சோப்பு, சர்க்கரை, பால்பவுடர், நாப்கின், புளி, தேங்காய் எண்ணெய், கைலி, சேலை, நைட்டி, வேட்டி, சமையல் எண்ணெய் ஆகிய 27 பொருட்கள் அடங்கிய தலா ரூ.3,800 மதிப்பிலான நிவாரணப்பொருட்கள் வழங்கப்படுகின்றது.

கடவூர் வட்டத்திற்குட்பட்ட 673 பயனாளிகளுக்கு ஏற்கனவே, தலா ரூ.10,780 மதிப்பிலான ரூ.72,4,940 மதிப்பிலான நிவாரணப்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. இன்று 673 பயனாளிகளுக்கு தலா ரூ.3,800 மதிப்பிலான 27 பொருட்கள் அடங்கிய ரூ.25,57,400 மதிப்பிலான பெட்டகங்கள் வழங்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் கடவூர் வட்டத்தில் கஜா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை சுமார். ரூ.1கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் அரசின் சார்பில் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.ம.கீதா, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.சூர்யபிரகாஷ், குளித்தலை வருவாய்க்கோட்டாட்சியர் திரு.லியாகத், கூட்டுறவு சங்கப் பிரதிநிதிகள் திரு.ஏ.ஆர்.காளியப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.காமராஜ், கடவூர் வட்டாட்சியர் திருமதி.கற்பகம் உள்ளிட்ட அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.